# சடகோபனென அவதாரம்



சடகோபனென இவ்வுலகில் அவதரித்தவரே,

திட மனதுடன் இருந்து பரமனைக் கண்டவரே

சடகோபனென......

பரமனையன்றி வேறோருவரை காணேனென்று,

மரப்பொந்தினில் மறைந்திருந்து வாழ்ந்தவரே

பரமனை உம்பாடல்களில் புகழ்ந்து உம்மெதிரே,

வரச்செய்து தரிசனம் செய்து மகிழ்ந்த பராங்குசரே!

சடகோபனென.....

மறைகள் நான்கையும் உம் எல்லா பாடல்களிலும்,

மறைக்காமல் எங்களுக்குத் தந்து உதவிபுரிந்தவரே

பிரமாதியாண்டில் அவதாரம் செய்த நீங்களும் அந்த,

பிரம்மத்தை நேரில் கண்டு மகிழ்ச்சி கொண்டவரே!

சடகோபனென........